மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஓமலூர்.

**முன்னிலை.திரு.சி.எம்.வெற்றிமணி.,எம்.எல்., (Property Law)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஓமலூர்.**

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22–ம் நாள் புதன்கிழமை
(2057–திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆடித்திங்கள் 06–ஆம் நாள்)

**அ.வ.எண்.274/2015**
(CNR No.TNSA0F-000122-2015)

1. சம்பூரணி
2. சரவணா ... வாதிகள்

/எதிர்/

1. அம்மாசி (died)*
2. சாந்தி
3. சாரதா
4. ராஜா
5. தமிழகன்
6. கந்தசாமி (died)*
*7. கருங்கன்னி
*8. லட்சுமி
*9. சுரேஷ்
*10. செந்தில்
*11. கமலா
*12. அசைதம்பி
*13. குமரன்
*14. குமார்
15. பாலு (died)*
*16. மனோகரன்
*17. ரவி
*18. இந்திரா
*19. குணசேகரன்
*20. ரமேஷ் ... பிரதிவாதிகள்

*(Amended as per order in I.A.No.11/2024, dated 17.10.2024)

இந்த வழக்கானது 23.06.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5, 7 முதல் 14, 16 முதல் 20 பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில்

ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**தீர்ப்புரை**

அசல் வழக்கானது, தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 7 சரிசம பாகங்களாக பிரித்து பாகப்பிரிவினை செய்து அதில் 1, 2 வாதிகளுக்கு தலா 1 பங்கினை ஒதுக்கீடு செய்து தனிசுவாதீனம் கொடுக்க வேண்டி முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்க கோரியும் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து சொத்துக்களை பிரித்து வாதிகளுக்கு தனிசுவாதீனத்தை ஒப்படைக்க உத்தரவிட கோரியும், 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா சொத்தை வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்தி வாதிகளின் அமைதியான அனுபவ சுவாதீனத்திற்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதியால் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 1 முதல் 6–ன் கீழ் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:–**

தாவா சொத்தானது இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட தாரபுரம் கிராமத்தில் சர்வே எண்.262/4, 262/5 ல் அமைந்துள்ள நிலம் மற்றும் கிணறு ஆகும். தாவா சொத்துக்கள் ஆதியில் 1ம் பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதியின் தந்தையுமான இருசாகவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், கடந்த 25.06.1996ம் தேதி இருசாகவுண்டர் அவர்களும், அவரது மகன்களான 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதியும் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தின்படி 1ம் பிரதிவாதி அம்மாசிக்கு B ஷெட்யூல் சொத்து கிடைத்தது என்றும், தாவா சொத்திற்கான பட்டா இருசாகவுண்டர் மற்றும் கந்தசாமி பெயரிலும் இருந்து வருகிறது என்றும், பட்டா எண்.44 மற்றும் 83 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகளும், 2 முதல் 5 பிரதிவாதிகளும் சகோதர, சகோதரிகள் என்றும், 6ம் பிரதிவாதி வாதிகளின் சித்தப்பா என்றும், வழக்கில் சம்பிரதாய தரப்பினராக 6ம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 6ம் பிரதிவாதி இறந்துவிட்டதால், 6ம் பிரதிவாதியின் வாரிசுகள் 7 முதல் 17 பிரதிவாதிகள் வழக்கில்

சேர்க்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் 15ம் பிரதிவாதியும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டதால் 15ம் பிரதிவாதியின் வாரிசுகளான 18 முதல் 20 வரையிலான பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், வாதிகளுக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் இடையில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பேச்சுவார்த்தை எதுவும் இல்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகள் கூட்டுசேர்ந்து வாதிகளின் பாகத்தையும் மறைத்து மோசடி செய்ய முயற்சி செய்ததால், வாதிகள் பலமுறை சொத்தை பிரித்து கொடுக்க சமதான பேச்சுவார்த்தை செய்தும், 25.07.2015ம் தேதி ஊர் பெரியோர்கள் மற்றும் முக்கியஸ்த்தர்கள் மூலம் சொத்தை பிரித்து கொடுக்க பஞ்சாயத்து செய்தும், பிரதிவாதிகள் சொத்தை பிரித்து கொடுக்க முன்வரவில்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்து வருவதால் வாதிகள் 1/7 பாகம் கோரி பாகப்பிரிவினை வழக்கினையும், தாவா சொத்தை 3ம் நபர்களுக்கு அசல் வழக்கு முடியும் வரை விற்பனை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகளுக்கு சமநிலை வாய்ப்பு சாதகமாக உள்ளது என்றும், முதல்தோற்ற வழக்கும் உள்ளது என்றும், ஆகையால் வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரத்தையும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் வழங்க வேண்டும் என்று வாதிகளால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**3. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்**

வாதிகளுக்கு வழக்கில் அவர்கள் கோரியவாறு பாகப்பிரிவினை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கத்தக்கதா?

4. வாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. தாவா சொத்தானது இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட தாரபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்தானது சர்வே எண்.262/4, 262/5ல் அமைந்துள்ளது. தாவா சொத்தானது வாதிகளின் தாத்தா இருசாகவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். 1,2 வாதிகளும், 2 முதல் 5 பிரதிவாதிகளும் சகோதர, சகோதரிகள் ஆவார்கள். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியும், 6ம் பிரதிவாதியும் இருசாகவுண்டர்

என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். இருசாகவுண்டரும் அவரது மகன்களான 1ம் பிரதிவாதியும், 6ம் பிரதிவாதியும் கூட்டுக்குடும்ப சொத்துக்களை தங்களுக்குள் பாகம் பிரித்து கொண்டதில் வாதிகளின் தந்தையான 1ம் பிரதிவாதிக்கு C ஷெட்யூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் பரிசீலிக்கப்பட்டதில் 25.06.1996ம் தேதி 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி, இருசாகவுண்டர் ஆகியோர்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்களை தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி 1ம் பிரதிவாதிக்கு C ஷெட்யூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள C ஷெட்யூல் சொத்து தான் இந்த வழக்கின் தாவா சொத்தாகும். இந்த வழக்கின் 6ம் பிரதிவாதி கந்தசாமி சம்பிரதாய தரப்பினராக பெயரளவில் சேர்க்கப்பட்டுள்ளதால் 6ம் பிரதிவாதியை பொறுத்தோ, 6ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7 முதல் 20 வரையிலான பிராதிவாதிகளை பொறுத்தோ வாதிகளுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

6. தற்போது வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனை 1ம் பிரதிவாதி அம்மாசி பாகப்பிரிவினை மூலம் அடைந்த சொத்து பிதுர்ராஜித சொத்தா அல்லது சுயார்ராஜித சொத்தா என்பதே ஆகும். மேலும், தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என வாதிகள் குறிப்பிடுவது சரியானதா என்பதும், கூட்டுக்குடும்ப சொத்தாக எடுத்துக்கொள்ளப்படும் நிலையில் வாதிகளுக்கு வழக்கில் கோரியவாறு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதா என்பதே ஆகும்.

7. பாகப்பிரிவினை வழக்கை பொறுத்தவரை கூட்டு பங்குத்தாரர்கள் அனைவரும் சுவாதீன மற்றும் அனுபவத்தில் இருப்பதாக அனுமானிக்கலாம் என்பதால் வாதிகளும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக முடிவு செய்யப்படுகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு உரிமை மூலம் ஏற்பட்டுவிட்டதால் 1ம் பிரதிவாதியின் ஆயுட்காலத்திற்கு பின்னர் தாவா சொத்தானது வாதிகளுக்கும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் சரிசமமாக கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

8. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 பட்டாக்கள் பரிசீலிக்கப்பட்டதில் தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தந்தை இருசாகவுண்டர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு 1ம் பிரதிவாதி மற்றும் அவரது முன்னோர்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து உள்ளதை அறிய முடிகிறது. கூட்டுக்குடும்பத்தில் ஒரு பங்குத்தாரர் இறந்துவிட்டார். அந்த பங்குத்தாரரின் சொத்தானது மற்ற வாரிசுகளுக்கு இறங்குரிமையின் அடிப்படையில் வந்தடையும் என்பதால் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது பாகத்தை மற்ற வாரிசுகள் பிரித்துக்கொள்ள தடை ஏதும் இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

9. இந்து வாரிசு உரிமைச்சட்டப்படி பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்து அந்த பங்குதாரரின் தனிப்பட்ட சொத்தாக கருதப்படும் நிலையில் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி யாருக்கும் எந்தவித உயிலும் எழுதிவைக்காமல் இறந்துவிட்ட நிலையில் **இந்து வாரிசு உரிமை சட்டம் பிரிவு 8–ன்படி** 1ம் பிரதிவாதியின் நேர்வழி வாரிசுகளான வாதிகளுக்கும், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் சரிசம பங்கு உண்டு என முடிவு செய்யப்பட்டு, வழக்கில் வாதிகள் கோரியவாறு தாவா சொத்தில் 1/6 பாகம் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

10. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 சாட்சியத்தின் அடிப்படையிலும், வா.சா.ஆ.1 முதல் 4 சான்றாவணங்களின் அடிப்படையிலும் வாதிகளுக்கு வழக்கில் அவர்கள் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தின் வாயிலாக முறையான அழைப்பானை அனுப்பியும், வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்த முன்வராத சூழ்நிலையில் **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(1)(g)ன்படி** வாதிகளுக்கு சார்பாக தாவா சொத்தில் பங்கு உண்டு என அனுமானம் செய்யப்படுகிறது.

11. கூட்டுக்குடும்ப சொத்தை பொறுத்து ஒரு பங்குத்தாரருக்கு ஆதரவாக மற்ற பங்குத்தாரர்களுக்கு எதிராக தடை உத்தரவு வழங்க இயலாது என்பதால் 2 முதல் 5 பிரதிவாதிகள் வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என முடிவு செய்யப்படுகிறது. அசல் வழக்கு முடியும் வரை மட்டுமே தாவா சொத்தை விற்பனை செய்யக்கூடாது என

வாதிகள் பரிகாரம் கேட்டுள்ள நிலையில் வாதிகளுக்கு பங்கு இருப்பதாக அசல் வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கத்தல்ல என முடிவு செய்யப்பட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

12. வாதிகள் வழக்கில் 2/7 பாகம் வழங்க கோரியுள்ள நிலையில் 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் உள்ளபோது இறந்துவிட்டதால், பாகம் மாற்றியமைக்கப்பட்டு 2/6 பாகம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

**13. முடிவில், வாதிகளின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்தில் வாதிகளுக்கு 2/6 பாகம் உள்ளது என்று விளம்புகை செய்து 2/6 பங்கினை வாதிகளுக்கு ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வாதிகளுக்கு சார்பாக வழங்கியும், வழக்கு சொத்தினை பொறுத்து பிரதிவாதிகள் வாதிகளுக்கு சேரவேண்டிய 2/6 பாகத்தை தர தவறும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து, தாவா சொத்தை 2 பங்குகளாக பிரித்து, அதில் வாதிகளுக்கு 2 பாகத்தினை ஒதுக்கி தனித்த சுவாதீனத்தில் ஒப்படைவு செய்தும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், வழக்கு சங்கதிகள் மற்றும் இதர சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு வழக்கு செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 22–ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) சி.எம்.வெற்றிமணி
கையொப்பம் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஓமலூர்.

**<u>வாதிகள் தரப்பிலான சாட்சிகள்</u>:**

வா.சா.1 – சம்பூரணி (1ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பிலான சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.06.1996 | இருசாகவுண்டர் மற்றும் அவருடைய மகன்களான 1ம் பிரதிவாதி அம்மாசி, 6ம் பிரதிவாதி கந்தசாமி ஆகியோர்களுக்கு இடையில் ஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 29.07.2015 | 1ம் பிரதிவாதி அம்மாசி பெயரில் உள்ள பட்டா | கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 04.08.2015 | இருசாகவுண்டர் மற்றும் அவரது மகனான 6ம் பிரதிவாதி பெயரிலுள்ள கூட்டு பட்டா | கணிணி நகல் |
| வா.சா.ஆ.4 | – | இருசாகவுண்டரின் வம்சாவழி பட்டியல் | அசல் |

(ஒம்) சி.எம்.வெற்றிமணி
கையொப்பம் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஓமலூர்.

District Munsif Court
Omalur
OS.274/2015
Draft/Fair Judgment
dated 22.07.2026